[1990 மார்ச் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இது பொதுவான பிரச்சினை. நீங்கள் பேசும் போது உங்களுக்கு வாய்ப்பு வரும்போது நீங்கள் பேசிக்கொள்ளலாம். அல்லது வேறு ஏதாவது தீர்மானம் கொடுத்தால் அது தொடர்பாக விடை சொல்வேன்.

5. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 9 (1)—ன் கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் நான்காவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்:

1. திரு. அ. லெ. சுப்பிரமணியன்
2. திரு. பெ. சு. திருவேங்கடம்
3. திரு. இரா. மோகன்
4. திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்
5. திரு. குமரி அனந்தன்
6. திரு. உ. ரா. வரதராசன்.

திரு. மா. சுந்தரதாஸ்: ** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு மா. சுந்தரதாஸ் அவர்கள் பேசியது அவைக் குறிப்பில் இடம் பெறாது.

6. வரவு-செலவுத் திட்டம், 1990-91—பொது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1990–91 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம். திரு. உகம்சந்த் அவர்கள் தொடங்கி வைப்பார்கள்.

[10–10 மணி]

*திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990-91 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துவைப்பதற்கு வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் படிக்கிற நேரத்தில், மக்களுக்கு செய்ய வேண்டிய சமூக நல, பல்வேறு உதவிகளை வழங்குகின்ற திட்டங்கள் இருக்கின்றனவா என்று பார்த்தால், அப்படிப்பட்ட திட்டங்கள் ஏதும் இல்லை ஏதோ கணக்கு வாத்தியார் கணக்குப் போடுவதுபோல, அவர்கள் போட்ட கணக்கில், இவ்வளவு வருவாய், இவ்வளவு செலவு, இது ஒரு பற்றாக்குறை என்கிற அடிப்படையில் ஒரு கணக்குக் குறிப்பு, ஆக இந்த பட்ஜெட் இருக்கிறது. மக்களுக்குப் பயனளிக்கின்ற எந்த ஒரு நல்ல திட்டமும் இதிலே அறிவிக்கப்படவில்லை. அதைப்போல, இந்தப்

** மாண்புமிகுபேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.